# ஆயரின் ஆசி மடல் 

*கிறிஸ்துவுக்குள் பிரியமான சகோதர, சகோதரிகளே,*

ஆண்டவரும் உலக இரட்சகரும் நமக்காக பாடுபட்டு, மரித்து, உயிர்த்தெழுந்த இயேசு கிறிஸ்துவின் இனிதான நாமத்தில் அன்பின் வாழ்த்துக்கள். இந்த மாதத்தின் வாக்குத்தத்த வசனம்

**“நான் இன்று முதல் உங்களை ஆசீர்வதிப்பேன்”**

**ஆகாய் 2:19.**

ஆசீர்வாதம் எல்லாருக்கும் உரியது, ஆனால் எல்லாரும் ஆசீர்வாதம் பெறுவது கிடையாது. இஸ்ரவேலரை ஆசீர்வதிப்பதே கர்த்தருக்குப் பிரியம். சிலருடைய வாழ்வில் ஆசீர்வாதம் பெறாமல் போவதற்கு காரணம் கடவுள் இல்லாதத் திட்டங்கள், செயல்பாடுகள், இறை நம்பிக்கை இல்லாமை போன்றவை ஆகும். வாழ்க்கையில் சிலருக்கு எதிர்பாராத ஆசீர்வாதங்கள் கிடைத்தது.

குறிப்பாக சிரேனா ஊரானாகிய சீமோன் இயேசுவின் சிலுவையை சுமக்கும் ஆசீர்வாதத்தைப் பெற்றான். 12 வருட பெரும்பாடுள்ள ஸ்திரீ இயேசுவுக்கு பின்னால் பலர் சென்றாலும், அற்புதம் என்கிற ஆசீர்வாதத்தைப் பெற்றாள். இஸ்ரவேல் மக்கள் அடிமைத்தன வாழ்விலிருந்து விடுதலை பெற்றும் ஆசீர்வாதத்தை பெறவில்லை. ஆகவே ஆகாய் தீர்க்கன் மூலமாக நான் இன்று முதல் உங்களை ஆசீர்வதிப்பேன் என்கிறார். என்று முதல் கர்த்தர் நம்மை ஆசீர்வதிப்பார் என்பதைப் பார்ப்போம்.

**1. கர்த்தரின் வழியில் நடக்கும்பொழுது ஆசீர்வாதம்:**

நாம் நடக்கும் வழி நல்ல வழியாக இருந்தால் ஆசீர்வாதம் கிடைக்கும். ஆகாய் தீர்க்கதரிசி காலத்தில் மக்களின் வழி தவறாக இருந்தது. எனவே, உங்கள் வழிகளைச் சிந்தித்துப்பாருங்கள். ஆகாய் 1:5,7; 2:15. இப்பொழுதும் இதற்கு முந்தின காலத்தில் நடந்ததை



உங்கள் மனதிலே சிந்தித்துப் பாருங்கள். ஆகாய் 2:18. நீங்கள் திரளாய் விதைத்தும் கொஞ்சமாய் அறுத்துக் கொண்டு வருகிறீர்கள். நீங்கள் புசித்தும் திருப்தியாகவில்லை. குடித்தும் பரிபூரணமடையவில்லை. நீங்கள் வஸ்திரம் உடுத்தியும் ஒருவனுக்கும் குளிர்விடவில்லை. கூலியைச் சம்பாதிக்கிறவன் பொத்தலான பையில் போடுகிறவனாய் அதைச் சம்பாதிக்கிறான். மக்கள் தவறான வழியில் சென்றதால் ஆசீர்வாதத்தை இழந்து போனார்கள். கர்த்தர் தம்முடைய பிள்ளைகளுக்கு நமக்கும் வழியை வேதத்தின் மூலம் போதித்தும் அவர்கள் அதன்படி நடக்கவில்லை. நீ நடக்க வேண்டிய வழியை உனக்குக் காட்டுவேன். சங். 32:8. நீ கர்த்தரின் வழியை கைக்கொள். தாவீது கர்த்தரின் வழியில் நடந்தான். அதினால் ஆசீர்வாதத்தைப் பெற்றுக் கொண்டான். வழி இதுவே, இதிலே நடவுங்கள். இஸ்ரவேல் மக்கள் இந்த வார்த்தைக்கு கீழ்ப்படிந்து கர்த்தருடைய வழியில் நடந்தார்கள். இந்த மாதத்தில் கர்த்தரின் வழியில் நடக்கும்பொழுது நிறைவான ஆசீர்வாதம் உண்டு.

**2. கர்த்தரை நம்பும்பொழுது ஆசீர்வாதம் :**

நாம் செய்யும் தொழில், வியாபாரம், படிப்பு, வேலை என ஒவ்வொரு காரியத்திலும் கர்த்தரை நம்பி செய்யும்பொழுது ஆசீர்வாதத்தைப் பெற்றுக்கொள்வீர்கள். தாவீது வாழ்க்கையில் கர்த்தாவே உம்மை நம்பியிருக்கிறேன் என நம்பியதால் வாழ்வில் உயர்வு, வெற்றி, புகழ் ஆகியவற்றை பெற்றுக் கொண்டான்.

கர்த்தரை நம்புகிறவனுக்கு கிடைக்கும் 7 ஆசீர்வாதங்கள் : 1) அவன் பாக்கியவான் 2) கிருபை சூழ்ந்துகொள்ளும் 3) கர்த்தர் துணையும், கேடகம் 4) சீயோன் பர்வதம் போல் நிலைத்திருப்பான் 5) பனையைப் போல செழிப்பான் 6) பூரண சமாதானம் கிடைக்கும் 7) உயர்ந்த அடைக்கலத்தில் வைக்கப்படுவான். அவர் என்னைக் கொன்று போட்டாலும், அவர்மேல் நம்பிக்கையாயிருப்பேன். யோபு

13:15. இரண்டு மடங்கு ஆசீர்வாதம், யோபு 42:12. 140 வயது வரை இருந்தான், நான்கு தலைமுறை கண்டான். புதிய மாதமாகிய இந்த மாதத்தில் கர்த்தர் மீது நம்பிக்கை வைப்போம் ஆசீர்வாதங்களை பெறுவோம்.

**3. கர்த்தரின் சமுகத்தில் தாழ்த்தும்பொழுது ஆசீர்வாதம் :**

கர்த்தருக்கு முன்பாகத் தாழ்மைப்படுங்கள், அப்பொழுது அவர் உங்களை உயர்த்துவார். யாக் 4:10 உலக வரலாற்றையும் திருச்சபை வரலாற்றையும் புரட்டி திருப்பிப் பார்த்தால் தாழ்மையுள்ளவர்களின் உயர்வை பார்க்க முடியும். பதவி உயர்வுகளைக் காட்டிலும் பணிவு உள்ளவர்கள் நிலைத்திருப்பான். பெருமை உள்ளவனை காட்டிலும் பொறுமையுள்ளவன் பாக்கியவான். கர்த்தரின் சமுகத்தில் தாழ்த்தும் பொழுது ஏழு ஆசீர்வாதங்கள் 1) இரட்சிக்கிறார் 2) உயர்த்துகிறார் 3) ஆவிக்குரிய ஆசீர்வாதம் தருகிறார் 4) கிருபையளிக்கிறார் 5) ஜெபம் கேட்கப்படுகிறது 6) நோக்கிப் பார்க்கிறார் 7) மேன்மை யளிக்கிறார் 2நாளா 33:12-13 மனாசே இராஜா நெருக்கப்படுகையில் தேவ சமுகத்தில் தன்னை தாழ்த்துகிறதால் விண்ணப்பத்தை கேட்டு மீண்டும் இராஜாவாக்கினார்.

2நாளா 33:23 ஆமோன் இராஜா கர்த்தரின் சமுகத்தில் தன்னை தாழ்த்தாமல் அக்கிரமம் செய்து வந்தான் அவனோடு இருந்த ஊழியர்களே ஆமோனை கொன்று போட்டார்கள். கர்த்தரிடம் நம்மை தாழ்த்தும்பொழுது ஆசீர்வாதம் உண்டு.

இந்த புதிய மாதத்தில் நாம் கர்த்தரின் ஆசீர்வாதம் பெற அவர் வழியில் நடப்போம், அவரையே நம்புவோம். அவர் சமுகத்தில் நம்மை தாழ்த்தும்பொழுது கர்த்தர் நம்மை ஆசீர்வதிப்பாராக. தேவ கிருபை நம் அனைவரோடும் இருப்பதாக. உயிர்த்தெழுந்த ஆண்டவரின் ஆசீர்வாதம் உங்களிடத்தில் நிலைத்திருப்பதாக.

*இறை பணியில்,*

**Rev. R.A.J. செல்வின்துரை**



# ஊழியத்தின் பாதையில்...

கிறிஸ்துவுக்குள் பிரியமானவர்களே, ஆண்டவரும் உலக இரட்சகருமாகிய இயேசு கிறிஸ்துவின் இனிதான நாமத்தில் அன்பின் வாழ்த்துக்கள். கடந்த மார்ச் மாதம் முழுவதும் ஊழியத்தை சிறப்பாக செய்வதற்கு ஆண்டவர் கிருபை கொடுத்தார்.

கடந்த பிப்ரவரி மாதம் 12.02.2023 அன்று சேர்ப்புக்கால பண்டிகை மிக சிறப்பாக நடைபெற்றது. காலை இரண்டாவது ஆராதனை 8.30 மணிக்கு நிறைவு பெற்றவுடன் தொடர்ந்து அறுப்பின் பண்டிகை ஏலம் ஆலயத்தின் வளாகத்தில் வைத்து நடைபெற்றது. திருச்சபை மக்கள் அனைவரும் கலந்து கொண்டார்கள். திருச்சபை மக்கள் அனைவரும் அவர்களது குடும்பத்தின் சார்பாக ஒவ்வொருவரும் தேவ ஆலயத்திலே வந்து அறுப்பின் பண்டிகை ஏலப்பொருட்களை சந்தோஷமாக படைத்தார்கள் அது மட்டுமல்லாது அனைவரும் கடைசி வரையிலும் இருந்து அனைத்து பொருட்களையும் ஏலம் எடுத்துச் சென்றார்கள். இது ஒரு சிறப்பான பண்டிகையாக அமைந்தது. ஒரு பொருட்களும் மீதம் இல்லாமல் அனைத்தும் ஏலம் எடுக்கப்பட்டது திருச்சபைக்கு ஆசீர்வாதமாக அமைந்தது.

அதே மாதத்தில் 26.02.2023 அன்று அரசு தேர்வு எழுதுகின்ற 10, 11 மற்றும் 12 ஆகிய வகுப்புகளில் பயிலுகின்ற பிள்ளைகளுக்கான சிறப்பு சபைமன்ற அளவிலான கூடுகை நடைபெற்றது. அதில் சுமார் 120 பேர் கலந்து கொண்டார்கள். அவர்களுக்கு சிறப்பான ஜெபம், சிறப்பான ஆலோசனை கொடுக்கப்பட்டது. அந்த கூடுகை அரசு தேர்வு எழுதப் போகின்ற பிள்ளைகளுக்கு மிகவும் பிரயோஜனமாக இருந்தது.

மார்ச் மாதம் முதல் ஞாயிற்றுக்கிழமை மாலை 4 மணிக்கு சுவிசேஷ ஊழியமாக கணபதி நகரை மையமாக வைத்து ஊழியம் நடைபெற்றது. அதில் சுமார் 60 பேர் கலந்து கொண்டார்கள். ஊழியம் சிறப்பாக நடைபெற்றது. அநேக மக்களுக்கு பிரயோஜனமாகவும் அமைந்தது இதைப்போன்று நம்முடைய ஆலயத்தில் ஒவ்வொரு மாதமும் முதல் ஞாயிற்றுக்கிழமைகளில் இப்படி சுவிசேஷ ஊழியம் செல்ல ஆயத்தப்படுகிறோம். அதற்காக ஜெபித்துக் கொள்ளுங்கள்.

இந்த லெந்து என்னும் தவசு நாட்களில் ஒவ்வொரு வெள்ளிக் கிழமையும் காலை 6 மணி முதல் சனிக்கிழமை காலை 6 மணி வரை சங்கிலித் தொடர் ஜெபம் நடைபெறுகிறது. அநேகர் வந்து இரவு நேரங்களிலும் குடும்பம் குடும்பமாக சேர்ந்து இணைந்து ஜெபிக்கிறீர்கள்.

இந்திய மிஷனெரி சங்கத்தின் மூலமாக நமது தூய பேட்ரிக் இணைப் பேராலயத்திலிருந்து 52வது ஆலயத்தை ஒடிசா மாநிலம் மட்டிக்கால் என்கிற பணித்தளத்தில் கட்டிக் கொடுக்க தேவன் கிருபை செய்தார். 12.03.2023 அன்று மங்கலப்படைப்பு செய்யப்பட்டது. நம்முடைய ஆலயத்தில் இருந்து சுமார் 30க்கும் மேற்பட்டவர்கள் சென்று அந்த மிஷனெரி பணித்தளங்களை சுற்றிப்பார்க்க தேவன் கிருபை செய்தார். மேலும் ஆந்திரா மாநிலம் தோர்ணக்கல் மாவட்டத்தில் 25வது ஆலயமாக கட்டி கொடுக்கப்பட்ட ஆலயத்தை சுற்றி சுற்று சுவர் அமைக்க நம்முடைய வாலிப ஆண்கள் சங்கம் கொடுத்த பண உதவியின் மூலமாக சுற்றுச்சுவர் வேலை நிறைவு பெற்று தோர்ணக்கல் பேராயர் மூலமாக அது பிரதிஷ்டை செய்யப்பட்டது. மேலும் நம்முடைய ஆலயத்தில் 25.03.2023 சனிக்கிழமை அன்று திருச்சபை உபவாச ஜெபம் நடைபெற்றது. அந்த கூடுகையில் ஏராளமான மக்கள் கலந்து கொண்டனர்.

அன்பிற்குரியோர்களே, நம்முடைய ஆலயத்தில் நடைபெறும் அனைத்துவிதமான ஊழியங்களிலேயும் அனைவரும் தவறாமல் கலந்துகொண்டு தேவ நாமத்தை மகிமைப்படுத்துவோம்.

**Rev. M. காலேப் மேன்சிங்**
**Rev. R.A.J. செல்வின் துரை**
திருப்பணிவிடையாளர்கள்

## லெந்துகால கன்வென்ஷன் செய்தியாளர்கள் 2023

**நேரம் : மாலை 6.30 மணி**

| | |
|---|---|
| ஏப்ரல் 1, 2 | சகோ. **K. பட்டுராஜ் செல்வன்,** தூத்துக்குடி |
| ஏப்ரல் 3,4,5 | சகோ. **J. இம்மானுவேல் கோயில்ராஜ்,** அந்தமான் |
| ஏப்ரல் 9 | சகோ. **J. ஜெகத் ரட்சகர் இன்னிசை குழு,** சண்முகபுரம் |



## பிறந்தநாள் ஆசரிப்பவர்கள்

**ஏப்ரல் 1**

திருமதி. K. விக்டோரியா கனகராஜ்
செல்வன். R. துரைராஜ் சாமுவேல் அதிசயமணி
செல்வி. V. திவ்ய செரின்
திருமதி. M. எஸ்தர் ஜாய்
திருமதி. ஜெனிஃபர்
திரு. Y.G. ஆசீர்வாதம்
திரு. P. சூடாமணி
திருமதி. J. சித்ரா
திருமதி. S. ஜோஸ்பின் டிவிங்கிள்
திருமதி. S. சந்திரலீலா
திரு. ராஜசேகரன்
திரு. ஜெகநாதன்

**ஏப்ரல் 2**

திருமதி. M. ஜோஸ்பின் பாக்கியரதி
செல்வி. ஜுவானா
செல்வி. A. சோபியா லினோலின்
செல்வி. J. ஜக்குலின் சிந்தியா இஷா
செல்வி. C. ஹெப்ஸி கிறிஸில்லா
திருமதி. ஜெயந்தி
திரு. D. பெரியதுரை
செல்வன். சாம்சன் சில்வான் சேகர்
திரு. I. விஜிபாலன்
திரு. F. சைமன் ராபர்ட்
செல்வி. A. அஸ்விதா
செல்வி. M. ஞான சௌந்தர்யா
செல்வி. W. பிளஸ்ஸி தங்க புஷ்பம்
திரு. J. பாஸ்கர்
செல்வன் B. ஜெரால்டு

**ஏப்ரல் 3**

திரு. K. இஸ்ரவேல்
திருமதி. T. விஜயராணி
பேபி. R. ருவின் சாம்சன்
செல்வன். G. ஹாட்லி ஆமோஸ்
திரு. V. ராஜமணி

**ஏப்ரல் 4**

திரு. K. சாலமோன் ராஜா
செல்வன். S. மனாசே ராஜா
செல்வன். J. ஜோயல் காட்வின்
திரு. R. ஜோசப்
திரு. J. தனராஜா
திருமதி. V. சாராள்
திருமதி. T. எஸ்கிலின்
திருமதி. P. ஹெப்ஸிபா
திருமதி. C. ஜெஸிலா ஜெயந்தி
செல்வி. I. ஜோனிட்டா
திரு. R. ஜெபஸ்டின் இம்மானுவேல் ராஜ்
திருமதி. A. கமலம்
திருமதி. K. எஸ்தர் விஜயா
திரு. S. சுந்தர்ராஜ்
திரு. C. ஜாண் ஆபிரகாம்

**ஏப்ரல் 5**

திரு. G.M. ரூபன் விக்டர்ராஜ்
திரு. J. பால்ராஜ் ஆபிரகாம்
திருமதி. V. பால சீனித்தாய்
செல்வி. M. ஜெலின்
திருமதி. D. குழந்தையம்மாள்
செல்வன். M. மரிய ஜேஸ்பர்ராஜ்
திருமதி. J. பிரின்ஸ் மெர்லின்
திருமதி. மரிய செல்வம்
திருமதி. விஜயா கிரேனாபூ
செல்வி. E. ஜேனிஸ் பெல்சியா

திரு. A. மதன் பிரபாகர்
திருமதி. B. சாரதா பர்னபாஸ்
செல்வி. S. ஷெருபீன்

**ஏப்ரல் 6**

திருமதி. R. ஷீலா பிரதீபா
திருமதி. அகல்யா கிறிஸ்டி
செல்வன். S. விவின் ஜாக்ஸன்
செல்வன். ஜெயகரன் விஜேஷ்
செல்வி. M. ஸ்டாப்னி மெரிஜா
திருமதி. J. ஜெஸிந்த் எடிசன்
செல்வி. P. பியூலா மேரி
செல்வன். S. ஜார்ஜ் இளவரசன்
திரு. G. காட்சன்
திரு. M. ஆனந்த் ப்ராங்ளின்
செல்வி. J. ஜின்
திரு. தங்கபழம்
செல்வி. J. அஞ்சனா
செல்வன். P. பியர்சன்
திருமதி. விஜயா
திருமதி. J. ஜெனிஃபா இவாஞ்சலின்
திருமதி. S. கல்யாணி
செல்வன். தயாகரன் விஜேஷ்
செல்வி. R. ஜெரோனிகா ஞானதீபம்
செல்வன். C. பிரபாகரன்
திரு. J. ராஜசேகர்

**ஏப்ரல் 7**

திருமதி. L. ஷிர்லி லிஸ்டின்
செல்வி. V. ஷர்மி சஹானா
செல்வி. D.G. ஸ்வீட்டி பிரின்ஸி
திரு. D. ஆபிரகாம்
திருமதி. V. ஜேஸ்மின்
செல்வன். S. சந்தோஷ் காலேப்
திரு. P. ஜோசப் பென்ஜமின்
திருமதி. M. இந்துமதி
திருமதி. G. ஸ்டெல்லா
செல்வி. K. ஷெரினா ஜெபக்கனி

**ஏப்ரல் 8**

திருமதி. M. வினோலியா
செல்வி. J. எஸ்தர் ஜெனிட்டா
திரு. J. ஜெர்மியா புனிதராஜ்
செல்வி. J. லீமா வாசக்
செல்வி. D. அபிஷா குளோரி
திரு. T. சாமுவேல்
திரு. J. மரிய மிக்கேல் ராஜ்
செல்வி. D.S. ஸ்வீட்வின்

**ஏப்ரல் 9**

I. ஜெயசிங்
திரு. B. பால்சன்
திரு. C.M. ஜோசுவா
திருமதி. J. ததேயு ராணி
செல்வன். S. ஜெம்ஸ்டன் சாலமோன்
செல்வன். J. ஜுயான் ஜெரோஸ்
திரு. S. ஆனந்தராஜ்
திரு. I. சோபனா ராஜா
திரு. G. ஜெயசிங்
திரு. A. தேவராஜ்
பேபி. M. ரஷிதா
திரு. K. ராகேஷ் மோசஸ்
பேபி. M. ஆஸ்நாத் பிரெய்சி

**ஏப்ரல் 10**

செல்வன். B. அபிஷேக்
திரு. C. பாஸ்கர்
திருமதி. மனோ ரஞ்சிதம்
திருமதி. ஜெபகனி
செல்வி. J. ஜெஸ்லின்
செல்வன் K. ஆல்ட்ரின் அபிஷேக்
திருமதி. S. ஜெயா
செல்வன். ஜேசன் ஸ்டிவ்வாக்



திரு. M. சுஜிவ்சன்
செல்வி. S. ஜென்ஸி ஸ்டெல்லா
செல்வி. J. ஜெஃப்ரி ஜெஸிகா
திருமதி. S. கேத்ரின் சத்யா ஜெபசீலி
செல்வி. J. ஜென்ஸி
செல்வி. J. சாரோன் ஜெபஸ்
திருமதி. I. குளோரி ஜெபமலர் கிருபாகரன்
செல்வி. ரபிலா ஆஸ்லி

**ஏப்ரல் 11**

செல்வி.E. ரேமா ரோஸ்
திரு. J. ஜான் ஆபிரகாம்
செல்வி. B. எமிலின் தனியா
திருமதி. B. ஜெபராணி
செல்வி. E. எஸ்தர்
திரு. J. ஜார்ஜ் தேவதாசன்
செல்வன். அஸ்டின் சாமுவேல்
செல்வி. ஜெஸிந்தா
திருமதி. G. எப்சி கலா
திரு. J. பெலிக்சன்
செல்வி. R. சிம்ரன்
திருமதி. ஜென்சி ராஜகுமாரி
திரு. G. கனகராஜ்
செல்வன். S. ஸ்டாலின்

**ஏப்ரல் 12**

திரு. C. ராஜதுரை ஜோஷ்வா
திரு. S. ரவி
செல்வி. V. ஷெர்லி
திருமதி. J. குளோரி
திருமதி. T. பாக்கியலெட்சுமி
செல்வன் D. சாம்
திருமதி. E. சுஜி பியூலா
திருமதி. R. இவாஞ்சலின் ஜெனிதா
திருமதி. V. சுசீலா
திருமதி. J. கீதா
செல்வன். A. சாம் பிரபாகரன்
திருமதி. K. விமலா ஜீவமணி
செல்வன். R. ஜெபமணி டேனியல்
திரு. K. செல்வராஜ்

**ஏப்ரல் 13**

திரு. Y. ஜெயசிங்
திருமதி. G. மேகி வசந்தகுமாரி
திருமதி. பெர்ஸிஸ் ஜெய சங்கீதா
செல்வி. J. ஜெபா ஆனந்தி
திருமதி. D. மரிய ஜாஸ்மின்
செல்வன். C.D.R. ஜோகன் டேனியல்
திரு. R. நெல்சன் பொன்துரை
செல்வன். D. ஜெடிடியா
திருமதி. J. அனிட்டா
செல்வி. S. விருத்தி பொன்ராணி
திருமதி. V. ஹேனா மேரி ஜெயந்தி
செல்வன். G. தேவகிருபா
திரு. P. செல்வமணி
செல்வி. A. பிளஸ்சி ஷீபா

**ஏப்ரல் 14**

திரு. P. ராஜேஷ்
திரு. P. வில்சன்
செல்வன் M. அன்புமணி
திரு. S. பாபு சங்கர ராம்
திரு. R. லால் பகதூர் சாஸ்திரி
திரு. K. ஸ்டேன்லி ஜேசன்
செல்வி. S. காயத்திரி பிரியா
செல்வி. M. மேபல் பெர்ஸியா
செல்வன். A. ஆல்வின்
செல்வன். E. சாமுவேல் ஜேம் சுந்தர்
திரு. P. பாஸ்கர்

**ஏப்ரல் 15**

திருமதி. S. எலிசபெத்

செல்வி. A. ரபீலா கிளாடிஸ்
திரு. S. ஆரோன்
திரு. தேவசகாயம்
செல்வி. எஸ்தர் செல்வராணி
திரு. R. இன்பராஜ்

**ஏப்ரல் 16**

திரு. T. அனில்ராஜ்
திருமதி. G. அனிட்டா
செல்வன். S. சிவபாலன்
திருமதி. Y. ஜெபமணி
திருமதி. ஸ்டெல்லா வயலட்
செல்வன். S. சாம்
திரு. P.S. பிரபாகரன்
பேபி. S. ஜெரேமி சாம்
திருமதி. J. ஷீபா
செல்வன். மோசஸ் டென்னிஸ் கிளிப்போர்ட்

**ஏப்ரல் 17**

செல்வி. J. ஜாக்கி ஏஞ்சல்
திரு. P. ஜெயகுமார்
திருமதி. S. கிருபா
திரு. S. பாக்கியநாதன்
செல்வி. A. ஜோஹன்னா ரெனிஷா
திரு. R. சாம் ராஜ்குமார்
திருமதி. S. வசந்தா மேரி
செல்வன் V. நிகில்
திருமதி. D. மங்களம்
திரு. D. அன்புதுரை
திரு. T. சாம் டேனியல்
செல்வி. N. ஏஞ்சல்

**ஏப்ரல் 18**

திருமதி. E. சந்திரா
செல்வி. J. ஏஞ்சல் ஜெனிட்டா
திருமதி. S. மெர்ஸி
செல்வன். நத்தானியேல் ஹைடன்
திரு. E. ஆபிரகாம் மனுவேல்
திரு. P. இம்மானுவேல் ஜேக்கப்
திரு. A. செல்வகுமார்

**ஏப்ரல் 19**

திருமதி. M. மானசி எஸ்தர்
திரு. R. பில்லி கிரஹாம்
செல்வன். J.S. சிபி ஆரோன்
திரு. அலெக்ஸாண்டர் ஜெசுபாதம்
திரு. K. எபநேசர் சாம்
செல்வன். P. மெல்பின் ஜோன்ஸ் சாலமோன்
திருமதி. J. ஜினிகமல் ஈஸ்ட்ரோ
திருமதி. D. ஆஷா ஜெபகனி
செல்வி. S. மேரி ஏஞ்சல்
செல்வி. D. ரோஸிகா
திரு. V. ஜோசப்
திருமதி. J. வயலட் ஜெயபால்
திரு. தீபன் லேமேக்

**ஏப்ரல் 20**

திரு. R. மோசஸ்
திருமதி. J. பவுலின் பாக்கியராணி
திரு. S. மணி
செல்வன். J. கிறிஸ்டோபர்
செல்வி. A. செல்வராணி
செல்வி. ஜெர்லின் மெட்டில்டா
திருமதி. N. ஜாண்சிராணி
திருமதி. H. ஜெபா மார்க்ரெட் சப்திகா
திரு. R. ஜெயராமன் ஜெபசிங்
திருமதி. S. லீலா
திரு. D. ஞானதாஸ்
செல்வன். R.D. ஜவின் திஷான்



**ஏப்ரல் 21**

செல்வன். S. ஜாண் ஆஸ்டின்
செல்வன். E. ஷைனி ஸ்வீட்லின்
திருமதி. J. லில்லி
செல்வன். V. பிருத்வி ஞானதேவா
திருமதி. J. பிரபா நேசகுமாரி
செல்வி. J. ஞானகிருபா விக்டோரியா
செல்வன். S. ராஜா
திரு. A. ஞானராஜ்
செல்வன். R. ஜிம் வில்லியம்ஸ்
திரு. G. ஐசக்
செல்வன். K. ஜான் எபின் கிருபா
மாஸ்டர். J. பெஸ்டஸ்
திருமதி. J. எஸ்தர்
திரு. D. பொன்ராஜ்

**ஏப்ரல் 22**

திரு. P. பெனடிக்ட் சாம்
செல்வன். P. ஆனந்தராஜ்
செல்வி. B. ஜெஸிந்தா மெர்லின்
செல்வி. R. ஜோலின் மெலோனா
திருமதி. J. சித்ரா
திருமதி. J. செலினா
செல்வன். K. டேனி பீட்டர்சன்

**ஏப்ரல் 23**

Dr. சிந்தியா மோகன்தாஸ்
திரு. S. ஸ்டாலின் செல்வின் ஜெகன்
செல்வி. P. ஈவ்லின் அனிஷா
திருமதி. ஜோதி ஜெயராஜ்
செல்வன். A. டிலன் மேத்யூ
திருமதி. A. ஜெப செல்வி
செல்வன். S. ஜோகன் சுரேந்த்
திருமதி. P. கிரேஸ்லின் ஹெப்சிபா
திரு. T. ஏசுதாசன் – ராஜா

**ஏப்ரல் 24**

திரு. S. மகேந்திரன்
திரு. S. ஆனந்த் சாமுவேல்
திரு. A. சாம் அந்தோணி
செல்வன். S. ஜோதி பாஸ்கர்
செல்வி. I. அஸ்மிதா
திரு. M.J. அன்பழகன்
திரு. J. வசந்த ஆபிரகாம்
செல்வன். J. காட்வின் ஜாண்சிங்
திருமதி. இன்பலதா
செல்வன். C.S. ஜேடன் ஹாட்லி
திருமதி. S. சகிலா

**ஏப்ரல் 25**

செல்வி. ஜோஷிகா
திரு. I. ஜேஸ்கர் ராஜா
திரு. D. ஜோசப் ராபின்சன்
திரு. J. ஜார்ஜ்
திரு. V. அருண்ராஜ் ராபின் ஜெபசீலன்
திரு. P.A. ஜவஹர்ராஜ்
செல்வி. A. அக்நஸ் பெலிமா
திரு. எட்வின் மங்கள்பாண்டி
செல்வன். ஜெரிஷ்
செல்வன். G.V. விவிலியன் அஸ்வின்
திரு. M. டேவிட்
திரு. தாசன்
திரு. J. கிருபாகரன்

**ஏப்ரல் 26**

திருமதி. ரொவினா ஆண்ட்ரு
செல்வி. A. ஷெரின்
திருமதி. D. ஜரின் கிரீனி
செல்வன் V. அஜய் டேனியல்
செல்வி. அலீஸ் மேரி
திருமதி. B. சிவகாமி

செல்வி. A. சாரோன்

செல்வி. B. ஏஞ்சலின் லாவன்யா

செல்வி. I. சியோன் பிளஸ்ஸி

திருமதி. A. ஜெனிபா மெர்ஸி

**ஏப்ரல் 27**

திருமதி. J. அன்புகரசி

திருமதி. S. ஜோதி நட்சத்திரம்

திரு. D. ஆண்ட்ரு மணி

செல்வன். இம்மானுவேல் சுந்தர்

திருமதி. ஜெயராணி

திருமதி. C. மேபல்

திரு. K.S. ஜெயபால்

செல்வி. A. ஜெர்லின் மேரி

திரு. J.R. ஐசக் பாலசிங்

திரு. C. சுகுமார்

திரு. A. மைக்கேல் வின்ஸ்

**ஏப்ரல் 28**

செல்வி. S. பிரின்ஸி ஷயாமலா

செல்வி. P. ஏஞ்சல் லிசா

செல்வி. ஆனந்தி

திருமதி. R. கிறிஸ்டி ராபின்சன்

செல்வன். ரெவிங்டன் ஜேம்ஸ்

திரு. J.S. தேவராஜன்

செல்வி. J. நல்லாள் எஸ்தர் ஜாய்ஸ்

செல்வன். S. எடிரியன் ராஃபோர்டு

செல்வன். J.L. அஸ்வின் இம்மானுவேல்

செல்வி. I. பாஸ்டி சாரோன்

**ஏப்ரல் 29**

திருமதி. G. அமல் விக்டோரியா

திருமதி. ஜெனிட்டா

செல்வன். ரயன் சோனியா

திருமதி. C. மெர்ஸி ஸ்டெல்லா நிக்சன்

திருமதி. J. சோனியா

திருமதி. R. அண்டோ ஜெனோலின் கிருபை மேரி

**ஏப்ரல் 30**

செல்வி. J. சிந்தியா

செல்வன். J. ஜாண் ஜெபர்சன்

திருமதி. S. சித்திரை செல்வி

திருமதி. G. ஜெனிஃபர்

திரு. E. ஸ்டீபன் கொம்பையா

திருமதி. குயின் ஜூலியட்

*கர்த்தர் உங்களை நீடித்த நாட்களாக திருப்தியாக்குவாராக.*
*உங்கள் அனைவருக்கும் எங்கள் அன்பான பிறந்தநாள் வாழ்த்துக்கள்*

## திருமண நாளை ஆசரிப்பவர்கள்

| | |
|---|---|
| ஏப்ரல் 4 | Mr. ஜேசுதாஸ் – Mrs. பொற்செல்வி |
| | Mr. ஜெயராஜ் – Mrs. சுந்தரி |
| ஏப்ரல் 5 | Mr. ஜெபக்குமார் – Mrs. எஸ்தர் ராணி |
| ஏப்ரல் 6 | Mr. விஜயன் – Mrs. செல்வி |
| ஏப்ரல் 9 | Mr. மார்வின் சாமுவேல் – Mrs. காருண்யா மார்வின் |
| ஏப்ரல் 12 | Mr. ஜெபக்குமார் – Mrs. J. தங்கம் |
| ஏப்ரல் 13 | Mr. அருண்ராஜ் – Mrs. செல்வகுமாரி அருண் |
| ஏப்ரல் 14 | Mr. ரஞ்சித் பாபு – Mrs. S. சகிலா |



| | |
|---|---|
| ஏப்ரல் 15 | Mr. J.P. தியாகராஜன் – Mrs. T. ரோசாலி |
| ஏப்ரல் 16 | Mr. J. சேவியர்ராஜ் – Mrs. X. ராஜாத்தி |
| | Mr. ஆசீர்துரை ராஜ் – Mrs. பெர்சி சோபியா |
| ஏப்ரல் 17 | Mr. B. சந்தோஷ்ராஜ் – Mrs. S. ஜெபஸ்டி |
| ஏப்ரல் 18 | Mr. S. ஜெபராஜ் – Mrs. S. கெத்ஸி |
| ஏப்ரல் 20 | Mr. ரெமிங்டன் – Mrs. மகா ரெஜினா |
| ஏப்ரல் 21 | Mr. W. டேனியல் வின்பிரட் – Mrs. D. ஜேஸ்மின் சோபனா |
| | Mr. A. ஜாண் நெல்சன் – Mrs. R. நர்மதா |
| ஏப்ரல் 22 | Mr. I. அண்டோ – Mrs. A. ஜெபசீலி ஹேமலதா |
| | Mr. J. சாமுவேல் ஆபிரகாம் – Mrs. S. கிறிஸ்டி சாம் |
| | Mr. S. ஜார்ஜ் போர்டு – Mrs. G. வசந்தா |
| | Mr. J. ஜெபமணி ஜோசப் – Mrs. J. ஞானசீலி |
| ஏப்ரல் 23 | Mr. C. குமார் – Mrs. G. அனிட்டா சுபாஷினி |
| ஏப்ரல் 24 | Mr. R. ஆபிரகாம் பிரதாப்குமார் – Mrs. சியாமளா சூசன் |
| | Mr. முகில் – Mrs. R. ஷைனி |
| | Mr. E.P.R. ஜெயகுமார் – Mrs. ஜெயந்தி ஜெயக்குமார் |
| | Mr. R. தனசேகர் டேவிட் – Mrs. D. ஜெயந்தி தனசேகர் |
| | Mr. S. வேதமுத்து – Mrs. லதா டெய்ஸிராணி |
| | Mr. T. ஜெயராஜ் – Mrs. J. லீலா ஜெயராஜ் |
| | Mr. I. செல்வராஜ் – Mrs. S. சித்ரா |
| | Mr. M. ஜெயகர் பிரேம்குமார் – Mrs. J. அகல்யா கிறிஸ்டி |
| ஏப்ரல் 25 | Mr. D. ஜெயராஜ் வில்லியம்ஸ் – Mrs. D. எபநேசர் அன்னம்மாள் |
| | Mr. D. சாம் ராஜாசிங் – Mrs. S. பிந்து சாம் |
| | Mr. J. ஜெர்மியா புனிதராஜ் – Mrs. J. நமிதா தாம்ஸன் |
| ஏப்ரல் 26 | Mr. V. கோயில்மணி – Mrs. K. ராஜம்மாள் |
| | Mr. J. ஜெயசிங் சத்யராஜ் – Mrs. ஷர்மிளா ஜெனிஷா |
| ஏப்ரல் 27 | Mr. A. பீட்டர் ராஜாசிங் – Mrs. A. ஜெய மோகனா |
| | Mr. J. சல்வாஸ் – திருமதி. Mrs. A. ஜாண்ஸி ராணி |
| ஏப்ரல் 30 | Mr. D. பொன்ராஜ் – Mrs. P. ஜெயகொடி |
| | Mr. S. மனோஜ் பிரபாகர் – Mrs. M. நந்தினி |

பிறந்த நாள், திருமண நாள் ஆசரிப்போரை கர்த்தருடைய ஆலயத்திலிருந்து வாழ்த்தி ஆசீர்வதிக்கிறோம். அன்றைய தேதிகளில் காலை 5.30 மணி ஆராதனைகளில் உங்களுக்காக சிறப்பு பிரார்த்தனை ஏறெடுக்கப்படுகிறது.
அனைவரும் கலந்து கொண்டு ஆண்டவரின் நிறைவான ஆசீர்வாதத்தை பெறுவீர்களாக.

தானதர்மம் பண்ண மறவாதிருங்கள். எபிரேயர் 13:16

# தூய பேட்ரிக் இணைபேராலயம்

தூத்துக்குடி

# 25வது அசனப்பண்டிகை அழைப்பிதழ்

நீங்களே அவர்களுக்குப் போஜனம் கொடுங்கள். மத்தேயு 14:16

**கிறிஸ்துவுக்குள் பிரியமானவர்களே,**

ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் இனிய நாமத்தில் நல் வாழ்த்துக்கள். திருச்சபை பண்டிகையில் இன்று அசன பண்டிகையை சிறப்பானதாக எல்லா திருச்சபைகளும் கொண்டாடுகின்றது. வருகிற மே1ம் தேதி நமது சபையின் 25வது வெற்றி விழா ஆண்டாக நமது அசனப் பண்டிகையை ஆசரிக்கிறோம். இந்தப் பண்டிகையை நாம் எப்படி ஆசரிக்க வேண்டும்.

**1. அன்பினால் செய்வோம் 1கொரி 13:3**

எனக்கு உண்டான யாவற்றையும் நான் அன்னதானம் பண்ணினாலும் அன்பு எனக்கிராவிட்டால் எனக்குப் பிரயோஜன மில்லை. நாம் செய்யும் இந்த தானதர்மம் கிறஸ்துவினுடைய அன்பை மற்றவர்களுக்கு வெளிப்படுத்த வேணடும். ஏழை, பணக்காரன், உயர்ந்தவர், தாழ்ந்தவர் என்ற பாகுபாடு இல்லாமல் எல்லாரையும் சமமாக கருதி இந்த அசனப் பண்டிகையை அன்போடு ஆசரிப்போம்.

**2. ஆர்வத்தோடு செய்வோம் 2கொரி 9:7**

அவனவன் விசனமாயும் அல்ல ... உற்சாகமாய் கொடுக்கிற வனிடத்தில் தேவன் பிரியமாயிருக்கிறார். அசன பண்டிகையில் திருச்சபை மக்கள் யாவரும் ஆர்வத்துடன் செயல்பட வேண்டும். கடமைக்காக அல்ல, முறுமுறுப்போடு அல்ல உற்சாகமாய் செயல்பட வேண்டும். இந்த அசனப் பண்டிகை ஒரு தானதர்மத்தை வெளிப்படுத்துகிறது. இப்படிப்பட்ட பலிகளின் மேல் ஆண்டவர் பிரியமாயிருக்கிறார். ஜெபித்து, கொடுத்து, உழைத்து ஆர்வத்துடன் ஆசரிப்போம்



**3. ஆண்டவருக்காக செய்வோம் மத் 25:35**

பசியாயிருந்தேன் எனக்கு போஜனம் கொடுத்தீர்கள். உலகில் இல்லாதவர்களுக்கு செய்வது, இயேசுவுக்கு செய்வது என அறிந்து செய்வோம். இந்த சிறியறில் ஒருவனுக்கு எதைச் செய்தீர்களோ, அதை எனக்கே செய்தீர்கள் என்ற வார்த்தையின்படி ஆண்டவருக்காக செய்வோம். 01.05.2023 திங்கள்கிழமையன்று நாம் ஆசரிக்கவிருக்கிற 25வது அசனப் பண்டிகைக்கு தாங்கள் குடும்பமாய் பங்கு பெற்றுச் செல்ல உங்களை அன்புடன் அழைக்கிறேன்.

*உங்களுக்காக ஜெபிக்கும்,*

**Rev. R.A.J. செல்வின்துரை**

சேகரகுரு

## 25வது அசனப்பண்டிகை ஆராதனை ஒழுங்குகள்

**01.05.2023 திங்கள் கிழமை**

**காலை 5.00 மணி பண்டிகை ஆராதனை**

*செய்தி :* **Rev. A.S. ஸ்டீபன் தனபால்**

Seafarers Centre, Tuticorin.

**25வது அசன ஸ்தோத்திர காணிக்கை கவர் படைத்தல்**

ஆராதனை நிறைவு பெற்றவுடன்
அசன உலை ஏற்றும் வைபவம் &
திருச்சபை மக்களின் ஐக்கிய காலை உணவு

மாலை 4.30 மணி

**அசன ஐக்கிய விருந்து**

*கிறிஸ்துவின் பணியில்*

| | |
|---|---|
| Mr. K. எபநேசர் சாம் | Rev. M. காலேப் மேன்சிங் |
| Mr. D. செல்வராஜ் | Rev. R.A.J. செல்வின் துரை |
| சபை ஊழியர்கள் | திருப்பணிவிடையாளர்கள் |

மறக்க முடியாத மாமனிதர்கள்



# தூய பேட்ரிக்
## (St. Patrick)

கி.பி. 385ம் ஆண்டு பிரிட்டன் தேசத்தின் தெற்கு வேல்ஸ் பகுதியில் ரோமானிய பெற்றோரான கல்பூர்ணியஸ் மற்றும் கொன்சேசா என்பவர்களுக்கு மகனாக பிறந்தவர் பேட்ரிக். கிறிஸ்தவ குடும்பத்தில் பிறந்திருந்தாலும் கிறிஸ்துவை பற்றி என்னாத நாத்திகராகவே வாழ்ந்து வந்தார்.

16வது வயது சிறுவனாக இருந்தபோது கொள்ள கூட்டத்தினரால் கடத்தப்பட்டு அயர்லாந்து தேசத்தின் மில்ச்சு என்ற ஒருவரிடம் அடிமையாக விற்கப்பட்டார். அங்கு அவருக்கு ஆடு மற்றும் பன்றிகளை மேய்க்கும் வேலை கொடுக்கப்பட்டது. முன்பு ஆண்டவரை தேடாமல், நினையாமல் இருந்த பேட்ரிக் ஆண்டவரின் பிரசன்னத்தை உணர்ந்து அதிகாலையில் சீக்கிரமாய் எழும்பி ஜெபித்து பின் வேலைகளை செய்ய ஆரம்பித்தார். அந்நிய தேவதைகளுக்கு பலியிட்டு வழிபாடு செய்வது இவரை மிகவும் பாரப்படுத்தியது, இதற்காக ஊக்கமாக ஜெபித்தார்.

பின்னாளில் ஆண்டவரின் ஊழியத்தை செய்ய தன்னை அர்ப்பணித்ததற்கு இதுவே ஒரு முக்கிய காரணம். எப்படியும் இந்த அடிமை வேலையிலிருந்து விடுதலை ஆக வேண்டும் என்று விரும்பினார். ஆறு ஆண்டு அடிமைத்தனத்திற்கு பின் ஒருநாள் ஜெபம் செய்யும்பொழுது “நீ சீக்கிரத்தில் உனது தாய் நாட்டுக்கு செல்லப்போகிறாய். உனக்கான கப்பல் தயாரக உள்ளது” என்ற ஆண்டவரின் வார்த்தையை கேட்டு, தான் அடிமையாக பணியாற்றிய இடத்திலிருந்து அசீரீரி கேட்டப்படியே 200 மைல் தூரம் ஓடி துறைமுகத்தில் கப்பலைக் கண்டு ஏறினார். ஆறு கால அடிமை வாழ்வு முடிந்து கப்பற் பயணத்தின்போது சாப்பாடு சாமான்கள் தட்டுப்பாடு ஆயிற்று. அப்போது பேட்ரிக் ஊக்கமாக ஜெபித்தார். திடீரென ஒரு வாத்து கூட்டம் கடற்கரை அருகில் வர இரண்டு மாத கடற்பயனத்திற்கு பின் பஞ்சம் தீர்ந்தது. சொந்த தேசம் திரும்பினார்.

ஒரு நாள் ஆண்டவர் சொப்பனத்தில் தோன்றி "Please, Holy boy come and walk among us again" “புனித சிறுவனே மீண்டும் எங்களிடம்



வந்து விடு நீ எங்களுக்கு தேவை” என்ற இந்த அழைப்பை ஏற்று கி.பி. 415ல் ஊழியத்திற்கென்று படிக்க தன்னை அர்ப்பணித்தார். கி.பி. 417ல் குருவாக அருட்பொழிவு பெற்று Auxere என்ற இடத்தில் பணியாற்றினார். உலகின் இயற்கை எழில் வாய்ந்த தீவுகளில் ஒன்றான அயர்லாந்து ஐந்தாம் நூற்றாண்டு வரை இருட்டில் இருந்தது.

யுத்தமே கதியென்றிருந்த பிரபுக்கள் ரத்த சகதியான இந்த நிலத்தையும் மக்களையும் ஆண்டு வந்தனர். இந்த தேசத்திற்கு கடல்தாண்டி கிறிஸ்துவின் வெளிச்சத்தை கொண்டு செல்ல பேராயர் Germanius என்பரால் ஊழியத்திற்கு அயர்லாந்து தேசத்திற்கு அனுப்பப்பட்டவர்தான் பேட்ரிக் அவர்கள். கிபி. 432ஆம் ஆண்டு அயர்லாந்தின் முதல் பேராயர் புனித பலேடியஸ் ஸ்காட்லாந்து தேசத்திற்கு மாற்றப்பட்ட அந்த இடத்திற்கு பேராயராக அபிஷேகிக்கப்பட்டார். இவர் திட்டமான அழைப்பை பெற்ற ஒரு ஊழியர். அக்காலத்தில் அயர்லாந்தின் பல பழங்குடியினர் கூட்டம் கூட்டமாக வாழ்ந்து வந்தனர். ஒவ்வொரு கூட்டத்திற்கும் ஒவ்வொரு தலைவன் மற்றும் பல தலைவர்கள் சேர்ந்து ஒரு ராஜாவை சேவித்தனர். அந்த அரசரை 40 வெண் அங்கி தரித்தவர்களுடன் சந்திக்க பாடி சென்றார். தான் இந்த தேசத்திற்கு அச்சுறுத்தல் அல்லவென்றும், கிறிஸ்துவின் ஒளியை கொடுக்க வந்திருப்பதாகவும் எடுத்துரைத்தார், அரசர் சந்திக்கப்பட்டார். ஆனாலும் துர்க்கிரியைகள் செய்யும் மந்திரவாதிகளால் துன்புறுத்தப்பட்டார் எனினும் சோர்வின்றி எதிர்ப்பின் மத்தியிலும் சுவிசேஷத்தை அறிவித்தார் பேராயர் பேட்ரிக்.

ஒருமுறை பேட்ரிக் அவர்கள் தன்னை அடிமையாக வைத்திருந்த மில்ச்சுவை சந்திக்க சென்றார். ஆனால் அவரோ அவரை பார்க்க மனமின்றி அவமானத்தினால் தன் வீட்டிற்கு தீ வைத்துக் கொண்டு தற்கொலை செய்துகொண்டார். மூன்று வளைவுகளையுடைய சாம்ராக் இலைகளை பயன்படுத்தி திரித்துவத்தை எளிமையாக விளக்கினார்.

கிபி 444ஆம் ஆண்டு பேட்ரிக் "The Church of Ireland"ஐ ஸ்தாபித்தார். சிதறி கிடந்த கிறிஸ்தவர்களை ஒன்று சேர்த்து பல கல்வி ஸ்தாபனங்களை ஆரம்பித்தார்.

ஒரு குன்றின் மேல் பெரிய பேராலயத்தை கட்டினார். இது "The Down of Patrick" என்று அழைக்கப்படுகிறது. கிறிஸ்தவர்களின் தனிப்பட்ட

பரிசுத்த வாழ்க்கையும், சுவிசேஷம் அறிவிப்பதையும் அதிகமாக சபையில் வலியுறுத்தி வந்தார். இவர் செய்த ஊழியத்தின் வாயிலாக அயர்லாந்து முழுமையும் ஆண்டவருக்குள் வழிநடத்தப்பட்டது. நச்சுப் பாம்புகள் அதிகமாய் இருந்த அயர்லாந்து பாம்புகள் இல்லாத தேசமாய் மாறியது. பிற்காலத்தில் அயர்லாந்தில் இருந்து அநேக மிஷனெரிகள் எழும்பினார்கள்.

அயராது உழைத்த பேராயர் பேட்ரிக் கிபி 460ஆம் ஆண்டு தன்னுடைய 72ம் வயதில் மார்ச் 17ஆம் தேதி தேவனோடு இருக்க அழைக்கப்பட்டார். அவரது நினைவுநாளான மார்ச் 17ம் தேதி பேட்ரிக் தினமாக உலகமெங்கிலும் கொண்டாடப்படுகிறது. தூய பேட்ரிக் அவர்களது வாழ்க்கையை பல கோணங்களில் படித்த பின்னர் அவர் திட்டமாய் ஊழியத்திற்கு அழைக்கப்பட்டவர் திடமாக சுவிசேஷத்தை அறிவித்தவர், திறனாக பரிசுத்த வாழ்வை சபை மக்களிடம் புகுத்தியவர் என்பதை அறியலாம்.

ஐந்தாம் நூற்றாண்டின் பரிசுத்தவானாகவும், அயர்லாந்தின் அப்போஸ்தலராகவும் போற்றப்பட்டவர் தூய பேட்ரிக் என்பதை புரிந்து நமது ஆலயத்திற்கு அவரது திருப்பெயரையே வைத்தது மிகப் பொருத்தமே. அவரது பெயரை நம் ஆலயத்திற்கு சூட்டிய அயர்லாந்திலிருந்து வந்த மிஷனெரி பேட்ரிக் ஆலயத்தின் தந்தை அருள்திரு. J.F. கேர்ன்ஸ் ஐயர் அவர்களை நன்றியோடு நினைவு கூறுவோம். தேவனை ஸ்தோத்திரிப்போம். தேவனுக்கே மகிமை உண்டாவதாக.

**மார்ச் மாதம் இளைப்பாறுதலில் பிரவேசித்தவர்கள்**

25.02.2023 திருமதி. **D. ஜோதிமணி**
02.03.2023 **திரு. T. ஜஸ்டஸ் தேவதாஸ்**
22.03.2023 **திரு. B. ஆதிசேகரன்**

கர்த்தருடைய இளைப்பாறுதலில் பிரவேசித்தவர்களின் பிரிவினால் வாடும் குடும்பத்தின் பிள்ளைகளுக்கு தேவன்தாமே சமாதானத்தையும் ஆறுதலையும் அருளிச் செய்வாராக.





# பாடல் பிறந்த வரலாறு

## பரி. தியோடல்ப்

**(St. Theodulph)**

பாடல் : **"ஓசன்னா பாலர் பாடும் ராஜாவாம் மீட்பர்க்கே"**

**"All glory laud, and honour''**

கிறிஸ்துநாதர் பாடுபடுவதற்கு முன்னே அவர் ஒரு கழுதைக் குட்டியின்மேல் பயணம் செய்து, அரச மரியாதைகளுடன் மகத்துவமாக எருசலேம் நகரத்துக்குள் சென்றார். அப்பவனியில் அவரது சீடரும், ஏராளமான யூதரும், பிள்ளைகளும் குருத்தோலைகளைப் பிடித்துக் கொண்டு ஓசன்னா பாடிச் சென்றனர். இப்பவனியின் நினைவாக உயிர்த்தெழுந்த திருநாளுக்கு முந்தின ஓய்வுநாளை, 'குருத்தோலை ஞாயிறு' என்னும் பெயருடன் திருச்சபை ஆசரித்து வருகிறது. சுமார் ஆயிரத்து நூற்று அறுபது ஆண்டுகளுக்கு முன் ஒரு குருத்தோலை ஞாயிறன்று, முதல்முதலாகப் பாடப்பட்ட ஒரு பாடலே 'ஓசன்னா பாலர் பாடும்" என்னும் பாடலாகும்.

கி.பி. எட்டாம் நூற்றாண்டில் இத்தாலி நாட்டில் தியோடல்ப் என்னும் ஒரு வாலிபன் இருந்தார். அவர் இளம் வயதிலேயே துறவிகள் மடத்தில் சேர்ந்து, சிறந்த பணியாற்றி வந்தார். நல்ல கல்வியறிவும், மடத்தை நல்லமுறையில் நடத்தும் திறமையும் உடையவராதலால், வெகு சீக்கிரத்தில் அவர் மடத்தின் தலைவரானார். அக்காலத்தில் மடங்களிலும், திருச்சபையிலும் குழப்பங்களும், சண்டை சச்சரவுகளும் உண்டாவது வழக்கமாய் இருந்தது. பக்தன் தியோடல்ப் இக்குழப்பங்களைத் திறமையுடன் சமாளித்து, மடத்தைச் சுற்றியுள்ள மக்களைச் சமாதானமாக வாழச் செய்தார். இவரது சிறந்த அறிவையும், பக்தியையும், திமையையும் கேள்விப்பட்ட பிரான்ஸ் நாட்டு சக்கரவர்த்தியான சார்லிமாக்னே L(Emperor Charlemagne) என்பவர் தியோடல்பை ஆர்லியன்ஸ் நகரத்தில் அத்தியட்சகராக நியமித்தார்.

மத்திய காலத்தில் (Middle ages) மத குருக்கள் மட்டுமே கல்வியறிவு பெற்றவராயிருந்தனர். பொதுமக்களில் பெரும்பாலா

னோர் கல்வியறிவு இல்லாதவர்கள். ஆதலின், அரசியல் விஷயங்களில் மத குருக்களும், தலைவர்களும் அதிகமாகத் தலையிடும் வாய்ப்பு இருந்தது. தியோடல்பை ஆதரித்த மன்னன் சார்லிமாக்னே இறந்தபின் அவரது புதல்வரான லூயி அரசன் (Louis the Pious) ஆட்சி புரிந்தார். ஆட்சியில் அவருக்குப் பல தொந்தரவுகள் நேரிட்டன. தியோடல்ப் அத்தியட்சகரிடம் பொறாமை கொண்ட பலர் அரசனிடம் சென்று, அவர் ராஜ துரோகியென்றும், அவராலேதான் அரசனுக்குத் தொந்தரவுகள் உண்டாயின என்றும் பொய்ப் புகார் செய்தனர். அரசன் கோபமுண்டு, தியோடல்பை ஆங்கர்ஸ் நகரத்தில் சிறையிலடைத்தார். அவர் மூன்று ஆண்டுகள் சிறையில் அவதிப்பட்டார். இந்த நேரத்தை அவர் வேத ஆராய்ச்சியிலும் பாடல்கள் எழுதுவதிலும் செலவிட்டார்.

கி.பி. 821ஆம் ஆண்டு, குருத்தோலை ஞாயிறன்று, லூயி அரசன் ஆங்கர்ஸ் நகரத்துக்கு வந்திருந்தார். வழக்கம்போல அரசன் தன் பரிவாரங்களோடும், மத குருக்களோடும் காலையில் குருத்தோலைகளைப் பிடித்துக் கொண்டு ஆலயத்துக்குப் பவனி சென்றார். தியோடல்ப் அடைப்பட்டிருந்த சிறை வழியாகப் பவனி செல்லும்போது, இத்தினத்திற்காக ஏற்கனவே அத்தியட்சகர் எழுதி வைத்திருந்த, 'ஓசன்னா பாலர் பாடும் ராஜாவாம் மீட்பர்க்கே' என்ற பாடலைச் சிறை கம்பிகளுக்குள் நின்று உரத்த சத்தமாய்ப் பாடினார். இதைக்கேட்ட அரசனும் பரிவாரங்களும் அமைதியாக பாடல் முடியும்வரை அங்கேயே நின்றனர். பாடல்முடிந்தவுடன் அரசன், "இப்பாடலை எழுதிய அத்தியட்சகர் ராஜ துரோகியல்ல, இவரை விடுதலை செய்யுங்கள்" என்று கட்டளையிட்டு, அவரை முன்போல ஆர்லியன்ஸ் நகரத்தின் அத்தியட்சகராக நியமித்தார். மேலும் ஒவ்வொரு குருத்தோலை ஞாயிறன்றும் இப்பாடல் அந்நாட்டின் ஆலயங்களிலெல்லாம் பாடப்பட வேண்டுமென்றும் கட்டளையிட்டார்.

இப்பாடல் முதலில் லத்தீன் மொழியில் எழுதப்பட்டது. 1842இல் ஜான் மேசன் நீல் என்பவரால் ஆங்கிலத்தில் மொழிபெயர்க்கப்பட்டு, பின்னர் தமிழ் உள்பட ஏராளமான பிறமொழிகளில் மொழிபெயர்க்கப் பட்டு உலகமெங்கும் குருத்தோலை ஞாயிறன்று பாடப்பட்டு வருகின்றது. இப்பாடலுக்கு நாம் பாடும் இராகம் முதலில் அத்தியட்சகர் தியோடல்ப் பாடிய இராகமல்ல. நாம் பாடும் இராகமானது டெஷ்னர் என்பவரால் எழுதப்பட்டு, அத்தியட்சகர் நினைவாக 'St. Theodulph' என அழைக்கப்படுகிறது.



## பரிசுத்தவார நிகழ்வுகள்

| | | |
|---|---|---|
| 2.4.23 ஞாயிறு | காலை 5.30 மணி | திருவிருந்து ஆராதனை |
| | | *தலைப்பு :* **கிறிஸ்து சமாதான ராஜா (சங் 24:7)** |
| | காலை 7.00 மணி | காலை ஆராதனை |
| | காலை 9.00 மணி | **குருத்தோலை பவனி** |
| | காலை 9.30 மணி | திருவிருந்து ஆராதனை |
| | மாலை 6.30 மணி | **லெந்துகால கன்வென்ஷன் கூட்டம்** |
| | | *செய்தி :* **சகோ. K. பட்டுராஜ் செல்வன்** |
| 3.4.23 திங்கள் | காலை 5.30 மணி | திருவிருந்து ஆராதனை |
| | | *தலைப்பு :* **அத்திமரத்தை சபித்தல் தேவாலயத்தை சுத்திகரித்தல் (மத் 21:12-22)** |
| | மாலை 6.30 மணி | **பரிசுத்த வார கூட்டம்** |
| | | **சகோ. J. இம்மானுவேல் கோயில்ராஜ்** |
| 4.4.23 செவ்வாய் | காலை 5.30 மணி | திருவிருந்து ஆராதனை |
| | | *தலைப்பு :* **கேள்வி நாள் (மத் 21:23-46)** |
| | மாலை 6.30 மணி | **பரிசுத்த வார கூட்டம்** |
| 5.4.23 புதன் | காலை 5.30 மணி | திருவிருந்து ஆராதனை |
| | | *தலைப்பு :* **தைலாபிஷேக நாள் (மாற் 14:1-11)** |
| | மாலை 6.30 மணி | **பரிசுத்த வார கூட்டம்** |
| 6.4.23 **கட்டளை வியாழன்** | காலை 5.30 மணி | திருவிருந்து ஆராதனை - **கட்டளை வியாழன்** |
| | மாலை 6.30 மணி | திருவிருந்து ஆராதனை |
| | | *தலைப்பு :* **கிறிஸ்து : வாழ்வு தரும் அப்பம் (1 கொரி 11:24)** |
| 7.4.23 **புனித வெள்ளி** | காலை 5.30 மணி | திருவிருந்து ஆராதனை (முன்பாகம்) |
| | காலை 11.30 மணி | **மும்மணி தியான ஆராதனை** (சுய வெறுப்பு உண்டியல் படைக்கவும்) |
| 8.4.23 சனி | காலை 5.30 மணி | காலை ஆராதனை |
| | காலை 8.00 மணி | **ஏழை எளியோருக்கு அரிசி வழங்குதல்** |
| 9.4.23 **ஞாயிறு** | அதிகாலை 3.00 மணி | **கிறிஸ்து உயிர்த்தெழுந்த பண்டிகை & திருவிருந்து ஆராதனை** |
| | | *தலைப்பு :* **உயிர்த்தெழுந்த இயேசுவுக்குள் வாழ்வை கொண்டாடுதல் (1 கொரி 15:52)** |
| | காலை 9.00 மணி | திருவிருந்து ஆராதனை |
| | காலை 11.00 மணி | **ஞானஸ்நான ஆராதனை** |
| | மாலை 6.30 மணி | **இன்னிசை நிகழ்ச்சி** |
| | | **சகோ. J. ஜெகத்ரட்சகர் இன்னிசை குழு** சண்முகபுரம் |

ஏப்ரல் 2023

# வேதாகமத்திலிருந்து கேள்விகள்



**(லூக்கா)**

1. “நீர் தேவனுடைய குமாரனாகிய கிறிஸ்து” என்றும் “நீர் தேவனுடைய கிறிஸ்து” என்றும் கூறியது யார்? யார்?
2. பிதா யாருக்கு மறைத்து, யாருக்கு வெளிப்படுத்தியதாக இயேசு கிறிஸ்து கூறுகிறார்?
3. லூக்கா 16:25ன்டி, ஆபிரகாம் கூறியதாக, இயேசு கூறும் இந்த வசனத்திற்கு தாங்கள் கூறும் கருத்து என்ன?
4. மனுஷனுடைய இருதயம் எப்பொழுது சோர்ந்துபோம் என்று கூறினார்?
5. இயேசு எப்போது ஜனங்கள் நடுவினின்று மறைந்து அல்லது கடந்து போய்விட்டார்?
6. யார் தேவனுடைய ராஜ்யத்துக்குத் தகுதியில்லாதவன் ஆகிறான்?
7. “நீர் என்னை விட்டுப் போக வேண்டும்” என்று இயேசுவிடம் கூறியது யார்?
8. எந்தக் காலம் வருமளவும் என்னைக் காணாதிருப்பீர்கள் என்று இயேசு கூறினார்?
9. பிதாக்கள் கள்ளத்தீர்க்கதரிசிகளுக்கு செய்தது என்ன?
10. நம்முடைய சகலமும் சுத்தமாவதற்கு நாம் செய்ய வேண்டியது என்ன?
11. இயேசுவிடம் கருத்தாய் வேண்டிக் கொண்டவர்கள் யார்?
12. தேவனுடைய ராஜ்யத்தின் இரகசியங்கள் ஜனங்களுக்கு எவ்விதமாக சொல்லப்பட்டது?
13. இயேசு யாரைக் குறித்து ஆச்சரியப்பட்டார்?
14. எப்பொழுது உன்னதமானவருக்கு பிள்ளைகளாயிருப்போம் என்று இயேசு கூறினார்?
15. தேவனுடைய ராஜ்யம் உங்களிடத்தில் எதனால் வந்திருக்கிறது என்று இயேசு கூறியுள்ளார்?

குறிப்புகள் :

1. A4 பேப்பரில் விடைகளை எழுத வேண்டும்.
2. **ஒரு கேள்விக்கு இரு வகையான பதில்கள் இருந்தால் அந்த கேள்விக்கு மதிப்பெண்கள் வழங்கப்பட மாட்டாது.**
3. **வசனத்தை அப்படியே எழுதக்கூடாது, விடைகளை மாத்திரம் எழுத வேண்டும்.**
4. இருப்பிடம் கட்டாயம் எழுத வேண்டும்.
5. 15ம் தேதிக்குள் விடைத்தாள்களை வேதவினா பெட்டியில் போட வேண்டும்



## மார்ச் மாத பதில்கள்

மாற்கு

1. மாற்கு 13:33 – எச்சரிக்கையாக, விழித்திருந்து ஜெபம் செய்ய வேண்டும்.
2. மாற்கு 4:18 – கவலை, ஐசுவரியத்தின் மயக்கம், இச்சை
3. மாற்கு 15:43 – ஆலோசனைக்காரன், அரிமத்தியா ஊரான், தேவனுடைய ராஜ்யம் வரக் காத்திருந்தவன். (பிலாத்துவிடம் அக்கம் செய்ய கேட்டு வாங்கியவன்
4. மாற்கு 1:13 – இயேசுவுக்கு ஊழியம் செய்தார்கள்
5. மாற்கு 2:25,26 – பிரதான ஆசாரியன், தாவீதுக்கு தேவ சமுகத்து அப்பங்களை கொடுத்தான்.
6. மாற்கு 8:11,12 – பரிசேயர், வானத்திலிருந்து ஒரு அடையாளத்தைக் காண்பிக்க வேண்டும் என்று கேட்டபொழுது
7. மாற்கு 7:11–13 – “காணிக்கை” மூலம் பாரம்பரியத்தினால் தேவ வசனத்தை அவமாக்குகிறார்கள்.
8. மாற்கு 10:31 – மாற்கு 10:31
9. மாற்கு 2:16,17 – பிணியாளிகளுக்கு, வைத்தியனுக்கு
10. மாற்கு 14:61,62 – நீ ஸ்தோத்தரிக்கப்பட்ட தேவனுடைய குமாரனாகிய கிறிஸ்துதானா? இயேசு : நான் அவர்தான்”
11. மாற்கு 9:44–48 – அங்கே அவர்கள் புழு சாவாமலும், அக்கினி அவியாமலும் இருக்கும்
12. மாற்கு 7:34,35 – “திறக்கப்படுவாயாக” செவிடர் திறக்க “எப்பத்தா” என்கிற வார்த்தையை இயேசு உபயோகித்தார்.
13. மாற்கு 3:17 – யாக்கோபு, யோவான்
14. மாற்கு 5:19,20 – லேகியோனிடம்; இயேசு தனக்கு செய்தவைகள்
15. மாற்கு 6:11 – அவர்களுக்கு சாட்சியாக கால்களின் கீழே படிந்த துஷியை உதறிப்போடும்போது

## மார்ச் மாதம் வேதாகம புதிர் சரியான விடை எழுதியவர்கள்

திரு. J. முத்துமாணிக்கம் ஆபிரகாம்
திரு. D. காட்வின் ஆண்ட்ரூஸ்
திரு. K. சாலமோன் ராஜா
திருமதி. கஸ்தூரி தமிழரசன்
திருமதி. செலினா ஜெயபால்
திருமதி. காஞ்சனா அசோகர்
திருமதி. கிறிஸ்டி செல்வமணி
திருமதி. சாந்தி ஜாண்
திருமதி. ரெஜினா கோயில்மணி
திருமதி. ஞானபாய்
திருமதி. ராணி இன்பராஜன்
திருமதி. ஃபிரிடா ஹென்றி
திருமதி. குளோரி தாமஸ்
திருமதி. விமலா ஜெயகுமார்
திருமதி. அன்பு இன்பராஜ்
திருமதி. விஜயா ஜெபராஜ்
திருமதி. மல்லிகா
திருமதி. லில்லி ஜெகநாதன்
திருமதி. ஜோதி ஜெயராஜ்
திருமதி. A. புஷ்பராணி
திருமதி. C. சரோஜினி சந்திரன்
திருமதி. D. எலிசபெத் நோவா
திருமதி. E. பியூலா எபநேசர்
திருமதி. I. குளோரி ஜோசப்
திருமதி. J. மாலதி போர்டு
திருமதி. J. பத்மா ஜெபராஜ்
திருமதி. J. ஞான கிருபா விக்டோரியா
திருமதி. K. விக்டோரியா கனகராஜ்
திருமதி. N. ஜான்சிராணி தாமஸ்
திருமதி. P. லலிதா
திருமதி. P. மரினாள் சுகந்தி
திருமதி. S. பரிபூரண பாக்கியவதி
திருமதி. S. திலகராணி
திருமதி. T. எஸ்கிளின்
திருமதி. T. எமிமா ரோலன்ஷியா

## ஏப்ரல்

| | | | |
|---|---|---|---|
| 1 | சங்கீதம் 91 | எபேசியர் 1-2 | உபாகமம் 27-28 |
| 2 | சங்கீதம் 92 | எபேசியர் 3-4 | உபாகமம் 29-30 |
| 3 | சங்கீதம் 93 | எபேசியர் 5-6 | உபாகமம் 31-32 |
| 4 | சங்கீதம் 94 | பிலிப்பியர் 1-2 | உபாகமம் 33-34 |
| 5 | சங்கீதம் 95 | பிலிப்பியர் 3-4 | யோசுவா 1-2 |
| 6 | சங்கீதம் 96 | கொலோ. 1-2 | யோசுவா 3-4 |
| 7 | சங்கீதம் 97 | கொலோ. 3-4 | யோசுவா 5-6 |
| 8 | சங்கீதம் 98 | 1தெச. 1-2 | யோசுவா 7-8 |
| 9 | சங்கீதம் 99 | 1தெச. 3-5 | யோசுவா 9-10 |
| 10 | சங்கீதம் 100 | 2தெச. 1-3 | யோசுவா 11-12 |
| 11 | சங்கீதம் 101 | 1தீமோ. 1-2 | யோசுவா 13-14 |
| 12 | சங்கீதம் 102 | 1தீமோ. 3-4 | யோசுவா 15-16 |
| 13 | சங்கீதம் 103 | 1தீமோ. 5-6 | யோசுவா 17-18 |
| 14 | சங்கீதம் 104 | 2தீமோ. 1-2 | யோசுவா 19-20 |
| 15 | சங்கீதம் 105 | 2தீமோ. 3-4 | யோசுவா 21-22 |
| 16 | சங்கீதம் 106 | தீத்து 1-2 | யோசுவா 23-24 |
| 17 | சங்கீதம் 107 | தீத்து 3 | நியா. 1-2 |
| 18 | சங்கீதம் 108 | பிலமோன் | நியா. 3-4 |
| 19 | சங்கீதம் 109 | எபிரேயர் 1-2 | நியா. 5-6 |
| 20 | சங்கீதம் 110 | எபிரேயர் 3-4 | நியா. 7-8 |
| 21 | சங்கீதம் 111 | எபிரேயர் 5-6 | நியா. 9-10 |
| 22 | சங்கீதம் 112 | எபிரேயர் 7-8 | நியா. 11-12 |
| 23 | சங்கீதம் 113 | எபிரேயர் 9-10 | நியா. 13-14 |
| 24 | சங்கீதம் 114 | எபிரேயர் 11-12 | நியா. 15-16 |
| 25 | சங்கீதம் 115 | எபிரேயர் 13-14 | நியா. 17-18 |
| 26 | சங்கீதம் 116 | யாக்கோபு 1-2 | நியா. 19-20 |
| 27 | சங்கீதம் 117 | யாக்கோபு 3 | நியா. 21 |
| 28 | சங்கீதம் 118 | யாக்கோபு 4-5 | ரூத் 1-2 |
| 29 | சங்கீதம் 119 | சங்கீதம் 119 | சங்கீதம் 119 |
| 30 | சங்கீதம் 120 | 1பேதுரு 1-2 | ரூத் 3-4 |
| | | | |





தூத்துக்குடி சேகரம்

## 2023 பிப்ரவரி மாத வரவு செலவு கணக்கு

### வரவு

| | |
|---|---|
| Opening Balance | 18,93,739.79 |
| குருமார் சங்கம் | 3162.00 |
| திருமண்டல அலுவலக சங்கம் | 10252.00 |
| Diocesan Institutions Development Fund | 15707.40 |
| பெண்கள் ஐக்கிய சங்கம் | 704.00 |
| Bishop Office Sangam | 2056.00 |
| கோயில் காணிக்கை | 51440.00 |
| பரி. நற்கருணை காணிக்கை | 103003.00 |
| ஸ்தோத்திர காணிக்கை | 118330.00 |
| பலவித காணிக்கை | 1285.00 |
| சங்கக் காணிக்கை - சபை | 135540.00 |
| சங்கக் காணிப்பை - ஊழியர் | 17082.00 |
| அறுப்பின் பண்டிகை | 281260.00 |
| திருமணம் | 43868.00 |
| ஞானஸ்நானம் | 14971.00 |
| தசமபாகம் | 57245.00 |
| தீப காணிக்கை | 2,650.00 |
| ஏலம் | 23390.00 |
| பலவித வரவுகள் | 7970.00 |
| வீடு சந்திப்பு காணிக்கை | 31050.00 |
| சிறுவர் ஆராதனை | 3457.00 |
| மிஷனெரி காணிக்கை | 2965.00 |
| பரி. பேட்ரிக் வேதாகம நிலையம் | 2870.00 |
| கன்வென்ஷன் | 7200.00 |
| Banns fees | 500.00 |
| மொத்தம் | 28,31,697.19 |

### செலவு

| | | |
|---|---|---|
| Pastorate Assessment | (Jan & Feb 2023) | 592800.00 |
| குருமார் அலவன்ஸ் | | 3,940.00 |
| உபதேசிமார் | | 28,000.00 |
| கோயில் வேலைக்காரர் | | 96258.00 |
| எழுத்தர் | | 29937.00 |
| அறுப்பின் பண்டிகை செலவுகள் | | 20800.00 |
| பரி. நற்கருணை செலவு | | 1155.00 |
| அச்சுக்கூலி | | 24357.00 |
| பழுது மற்றும் பராமரிப்பு பணி | | 9548.00 |
| சுவிசேஷ ஊழியம் செலவுகள் | | 1200.00 |
| தொலைபேசி கட்டணம் | | 3,561.00 |
| பாடகர் குழு செலவுகள் | | 1500.00 |
| சுயவெறுப்பு உண்டியல் | | 16676.00 |
| உபசரணை | | 20300.00 |
| ஆலய தேவைகள் | | 17975.00 |
| Water Tax | | 1500.00 |
| ஜெனரேட்டர் AMC | | 9558.00 |
| Advocate fees | | 10000.00 |
| பரி. பேட்ரிக் வேதாகம நிலையம் | | 7310.00 |
| கன்வென்ஷன் செலவுகள் | | 13239.00 |
| தமிழ் பாடசாலை | | 20830.00 |
| வங்கி கட்டணம் | | 300.00 |
| Closing Balance | Cash 11,860.00 | |
| | Bank 2,26,682.40 | |
| | Dio. 16,26,410.79 | 19,00,953.19 |
| மொத்தம் | | 28,31,697.19 |

**Rev. R.A.J. Selwyn Durai**
Pastorate Chairman

**Mr. P. Jebasingh**
Pastorate Treasurer

E & O E